நகராட்சி நிர்வாகம்,
திருச்செந்தூர் –628215
நாள்: 23.05.2022

சாதாரணக்கூட்டம்

அன்புடையீர் வணக்கம்,

திருச்செந்தூர் நகராட்சியின் சாதாரணக்கூட்டம் 30.05.2023 ம் தேதி, செவ்வாய்க் கிழமை, முற்பகல் 11.30 மணிக்கு நகர் மன்ற கூட்ட அரங்கில் வைத்து தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது. அதுசமயம் கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

<u>பொருள் எண். 01</u>

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் 2023 ஆம் ஆண்டு மாசித்திருவிழாவினை முன்னிட்டு, 03.03.2023–ந் தேதி முதல் 07.03.2023 வரை தரிசனம் செய்ய வரும் பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் நலன் கருதி நகரின் முக்கிய பகுதிகளில் இலவச குடிநீர் பந்தல் அமைத்திட அனுமதி கோரிய, இந்நகராட்சி சுகாதார ஆய்வாளரின் விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், பக்தர்கள் நலனை கருத்திற்கொண்டு நகர் பகுதிகளிலுள்ள 6– முக்கிய இடங்களில் சாமியானா பந்தல் அமைத்து, தண்ணீர் விநியோகம் செய்துள்ள வகைக்கு ரூ.75,500/–த்தினை திரு. கே. தீர்த்தார்ரப்பன், திருச்செந்தூர் என்பவருக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக் குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 320**

**தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 02</u>

திருச்செந்தூர் நகராட்சி அலுவலக பொதுசுகாதார பிரிவிற்கு தேவையான உதிரிச்சாமான்கள் மற்றும் கொசுமருந்து தெளிப்பதற்கு உபயோகப்படுத்தப்படும் சிலிண்டர்கள் வாங்கி வழங்கிட கோரிய, இந்நகராட்சி சுகாதார ஆய்வாளரின் விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், பொதுசுகாதாரநலனை கருத்திற்கொண்டு விலைப்புள்ளிகள் பெற்று, குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீகணேஷ் என்டர்பிரைசஸ், சேலம் நிறுவனத்தின் விலைப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டு விநியோக உத்திரவு வழங்கியதையும், பொருட்களுக்கான தொகை ரூ.2,67,270/– வழங்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளதையும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக் குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 321**

**தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 03</u>**

திருச்செந்தூர் நகராட்சி பொதுசுகாதார பிரிவு வாகனங்களில் ஏற்படுகின்ற சிறுசிறு பழுது நீக்கப்பணிகளான பஞ்சர் பார்த்தல், ஏர்செக்கப் மற்றும் டயர்கள் மாற்றியது போன்ற பணிகளை பொதுசுகாதார அவசர அவசியம் கருதி உள்ளூர் நிறுவனங்களில் பணி மேற்கொண்டுள்ள வகைக்கு, திரு. கந்தன், திருச்செந்தூர் என்பவருக்கு தொகை ரூ.14,210/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக் குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 322**

**தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 04</u>**

1. திருச்செந்தூர் நகராட்சி பொதுசுகாதார வாகனம் TN 69 AT 1140ல் டிப்பர் ஆயில் பிரசர் டியூப் வெடித்து, வாகனம் இயக்க முடியாத நிலையில், பழுது நீக்கப்பணிகள் மேற்கொண்டுள்ள வகைக்கு, திருச்செந்தூர், St. ஜான் மோட்டார் ஒர்க்ஸ் நிறுவனத்திற்கு பட்டியல் தொகை ரூ. 13,500/– வழங்கிடவும்,
2. திருச்செந்தூர் நகராட்சி பொதுசுகாதாரவாகனம் TN 69 AT8218–ல் சிறுசிறு பழுது நீக்கப்பணிகள் மேற்கொண்டுள்ள வகைக்கு, திருச்செந்தூர், ஸ்ரீமுருகா ஆட்டோ எலக்ட்ரிக் ஒர்க்ஸ் நிறுவனத்திற்கு பட்டியல் தொகை ரூ. 6,300/– வழங்கிடவும்,
3. திருச்செந்தூர் நகராட்சி பொது சுகாதார வாகனம் TN 69 AT 6386–ல் டிப்பர் தொட்டி பழுதடைந்து, வாகனம் இயக்க முடியாத நிலையில், பழுது நீக்கப்பணிகள் மேற்கொண்டுள்ள வகைக்கு, திருச்செந்தூர், St. ஜான் மோட்டார் ஒர்க்ஸ் நிறுவனத்திற்கு பட்டியல் தொகை ரூ. 19,010/– வழங்கிடவும், மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக் குறிப்பு:**

பொதுசுகாதார அவசர அவசியம் கருதி பழுது நீக்கப்பணிகள் மேற்கொண்டுள்ள வகைக்கு பட்டியல் தொகைகள் வழங்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 323**

**தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 05</u>**

தூத்துக்குடி மாவட்டத்தில் நான்காவது புத்தகத் திருவிழா – 2023 (21.04.2023 முதல் 01.05.2023 வரை 11 –நாட்கள்) நடைபெறவுள்ளதை முன்னிட்டு, தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் 10.04.2023–ந் தேதிய ஆலோசனைக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரையில், புத்தகத் திருவிழா நடத்திட தேவையான பங்களிப்பு நிதி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதின் அடிப்படையில்,

திருச்செந்தூர் நகராட்சிக்கென நிர்ணயம் செய்யப்பட்ட தொகை ரூ.2.00 இலட்சம் பொதுநிதியிலிருந்து செலவு செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம்அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 324**

**தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 06</u>

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி மாசித்திருவிழாவினை முன்னிட்டு நகராட்சிக்குட்பட்ட ரதவீதிகளில் சப்பரம் மற்றும் தேர் ரதம் செல்வதற்கு ஏதுவாக, நகராட்சிக்கு உட்பட்ட சாலையோரங்களில் உள்ள மரக்கிளைகளை அகற்றியது, சாலைகளில் உள்ள குழிகள் தெரியும் படி, மஞ்சள் நிற பெயின்டில் வட்டம் அடித்தது மற்றும் கூலி வழங்கியது போன்ற பணிகள் பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் நலன் கருதி மேற்கொண்டுள்ள வகைக்கு "திரு. ச. சரவணன், திருச்செந்தூர்" என்பவருக்கு பட்டியல் தொகை ரூ.19,000/- வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 325**

**தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 07</u>

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி மாசித்திருவிழாவினை முன்னிட்டு பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் நலன் கருதி, நகராட்சி பகுதிகளில் பொது சுகாதார பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு, அவசர அவசியம் கருதி லெமன் கிராஸ் ஆயில் வாங்கியுள்ள வகைக்கு "சென்னை, கனெக்டென் பிரைவேட் லிமிட்டெட்" நிறுவனத்திற்கு பட்டியல் தொகை ரூ.4,31,250/- வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 326**

**தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 08</u>

2017 ஆம் ஆண்டின் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கைகள் வரி சட்டம் பிரிவு 3(1)ல் குறிப்பிட்டுள்ள படி திருச்செந்தூர் நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள அனைத்து கேளிக்கை நிறுவனங்களும் நகராட்சியில் தங்கள் நிறுவனங்களை பதிவு செய்து 01.07.2017 முதல் கேளிக்கை வரியினை

திருச்செந்தூர் நகராட்சிக்கு செலுத்த வேண்டும். அதனடிப்படையில் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 17, தெற்குபுது தெருவில் உள்ள கிருஷ்ணா திரையரங்கில் வெளியிடப்படும் திரைப்படத்திற்கு அரசு விதிகளின் படி நிர்ணயம் செய்யப்படும் கேளிக்கை வரியினை வாரம் ஒருமுறை திருச்செந்தூர் நகராட்சிக்கு செலுத்திட அறிவிப்பு வழங்கிடும் பொருட்டு நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 550/அ1/2023

**தீர்மானம் எண். 327**

**தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 09</u>

திருச்செந்தூர் நகராட்சி அலுவலகக்கட்டிடம் மிகவும் பழுதடைந்து மழைக்காலங்களில் மேற்கூரைகளில் தேங்குகின்ற தண்ணீர் சுவர்கள் வழியாக ஒழுகி, அலுவலகப் பணிகள் பாதிக்கப்பட்டு வந்த நிலையில், பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் நலன் கருதி, திருச்செந்தூர் நகராட்சி தனிஅலுவலர்/ஆணையாளர் அவர்களின் தீர்மானம் எண்:35/2022, நாள். 24.01.2022–ன் படி, அனுமதிக்கப்பட்ட உத்திரவின் அடிப்படையில், அலுவலக மேல் தளத்தில் தளஓடு பதித்தது மற்றும் சிறு சிறு பழுது நீக்கப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள வகைக்கு "திருச்செந்தூர், என். எஸ். லேபர் கான்ட்ராக்ட் & சர்வீஸ்" நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. பட்டியல் தொகை ரூ. 1,60,615/– மட்டும் மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 328**

**தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 10</u>

திருச்செந்தூர் நகராட்சியின் 2022–23ம் ஆண்டிற்கான அனைத்து பிரிவுகளின் ஒருங்கிணைந்த நிர்வாக அறிக்கை (Administrative Report) மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 537/சி1/2023

**தீர்மானம் எண். 329**

**தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 11</u>

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் நகராட்சியில் விநியோகம் செய்யப்படும் குடிநீரில், பொதுமக்களின் நலன் கருதி பாதுகாப்பான முறையில் குளோரின் கலந்து

வழங்கிட, கீழ்கண்ட பகுதிகளில் குளோரினேசன் பிளாண்ட் அமைக்க தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டிற்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் வருவாய் நிதியில் ஈடு செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | பணியின் விவரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | நகராட்சி விருந்தினர் மாளிகை நிலையத்தில் குளோரினேசன் பிளாண்ட் அமைத்தல் | 12.50 |
| 2. | கானம் நீரேற்றும் நிலையத்தில் குளோரினேசன் பிளாண்ட் அமைத்தல் | 12.50 |

**அலுவலககுறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 330**

**தீர்மானிக்கப்பட்டது.**

<u>**பொருள் எண். 12**</u>

வட்டாட்சியர், திருச்செந்தூர் அவர்களின் கடித ந.க.எண். அ1/4616/2022, நாள். 15.09.2022 அன்று பெறப்பட்ட கடிதத்தில், தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், கீழத்திருச்செந்தூர் கிராமம், கால்நடை துறைக்கு சொந்தமான புல எண் 613/4ல் 0.08.61 ஹெக்.ஏர்ஸ் நிலத்தில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் சார்பில் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமைப்பதற்கு நகராட்சிக்கு எந்த தடையும் இல்லை என சான்று வழங்க மன்ற அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு :–**

மேற்படி கோரப்பட்டுள்ள இடமானது நகராட்சிக்கு பாத்தியப்பட்ட நிலம் இல்லை, எனவே மேற்படி இடத்தில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் சார்பில் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமைப்பதற்கு நகராட்சிக்கு எந்த தடையும் இல்லை என சான்று வழங்கலாம்.

**தீர்மானம் எண். 331**

**தீர்மானிக்கப்பட்டது.**

<u>**பொருள் எண். 13**</u>

திருச்செந்தூர் நகராட்சியில் கானம், எல்லப்பநாயக்கன் குளம் மற்றும் குரங்கனி குடிநீர் திட்டங்கள் மற்றும் பாதாள சாக்கடை திட்டம், மேலும் நகராட்சியில் மூலதன மானியத் திட்டம், தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பு திட்டம், தூய்மை இந்தியா திட்டம், கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம், 15வது நிதிக்குழு மானியம், மற்றும் பொதுநிதி போன்ற அரசின் திட்டப்பணிகள் நடைபெற்று வருவதால் நகராட்சி பொறியாளர் (பொ), பொதுப்பணி மேற்பார்வையாளர் (பொ) உதவியாக தொழில் நுட்ப பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் பணிகளை தினசரி கண்காணிக்கும் பொருட்டு தொழில்நுட்ப உதவியாளர்களை தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் 3

மாத காலத்திற்கு உத்தேச மதிப்பீடு ரூ. 3.30 இலட்சத்திற்கு நியமிக்கப்பட்டது. தற்போது மீண்டும் 3 மாத காலத்திற்கு தொழில்நுட்ப உதவியாளர்களை நியமிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 332**

நகர்மன்ற உறுப்பினர்களின் ஆட்சேபனையை கருத்தில் கொண்டு தீர்மானம் எண். 332 ரத்து செய்யப்பட்டது.

.**பொருள் எண். 14**

திருச்செந்தூர் நகராட்சி பகுதகளில் பாதாளசாக்கடை திட்ட ஆழ்துளை கிணறுகளில் அடிக்கடை அடைப்புகள் ஏற்பட்டு பொதுசுகாதார கேடு ஏற்படுவதால், பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு ஜெட்ராலிக் லாரி மூலம் சரி செய்திட மாவட்ட ஆட்சியரின் தினக்கூலி ஊதிய நிர்ணய அடிப்படையில் தற்காலிகமாக நான்கு பணியாளர்களை நியமனம் செய்வற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலககுறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 333**

**தீர்மானிக்கப்பட்டது.**

**தலைவர்**
**திருச்செந்தூர் நகராட்சி**